©
தமிழ்நாடு அரசு
2009

[Regd. No. TN/CCN/467/2009-11.
[விலை : ரூ. 3.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

**சிறப்பு வெளியீடு** ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 173A] சென்னை, செவ்வாய்க்கிழமை, ஜூலை 14, 2009
ஆனி 30, திருவள்ளுவர் ஆண்டு — 2040

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

**பொருளடக்கம்**

*பக்கங்கள்*

**சட்டமுன்வடிவுகள் :**

எண் 16/2009—தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் .. .. .. .. 2–3

எண் 17/2009—2009–ஆம் ஆண்டு பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் .. .. .. .. 5–6

எண் 18/2009—2009–ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டம் .. .. .. .. 7–8

**2009—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/2009**

***1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

1. (1) இந்த சட்டம், 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 22—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**89-ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**தமிழ்நாடு சட்டம் 30/1983.**

2. (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக்குறிப்பிடப்படுவதான) 1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில் 89—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவிற்கான வரம்புரையில், ‘‘எட்டு ஆண்டுகள்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ‘‘எட்டு ஆண்டுகள் ஆறு மாதங்கள்’’ என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நீக்கமும் காப்பும்.**

**தமிழ்நாடு அவசரச் சட்டம். 1/2009.**

3. (1) 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டமானது இதன் மூலம் நீக்கம் செய்யப்படுகின்றது.

(2) அவ்வாறு நீக்கம் செய்யப்பட்டிருக்கின்றபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் எதுவுமோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவுமோ இந்த சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டத்தின்படி செய்யப்பட்டுள்ளதாகவோ அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 25—ஆம் நாளிலிருந்தும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2001—ஆம் ஆண்டு மே திங்கள் 26—ஆம் நாளிலிருந்தும் ஓராண்டுக்கால அளவிற்கு 1983—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 89—ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்கீழ் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன கால அளவிற்குள்ளாக மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்த இயலவில்லையாதலால், மேற்சொன்ன சட்டத்தைத் திருத்தியதன்மூலம் மேற்சொன்னபிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்கால அளவானது 2008—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24—ஆம் நாளுக்கும் அப்பால் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்குக் கடைசியாக நீட்டிக்கப்பட்டது. அவர்களின் நியமன கால அளவானது தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 24—ஆம் நாளன்றும், மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 25—ஆம் நாளன்றும் முடிவடைவதாக இருந்தது.

2. கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்காக அரசினால் ஏற்பளிக்கப்பட்டவாறான கால அட்டவணையின்படி முதல் கட்டத்தில் முதல் இரண்டு நிலைகளுக்காக தேர்தல்கள் முறையே, 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 7—ஆம் நாளன்றும், 2007—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 11—ஆம் நாளன்றும் நடத்தப்பட்டன. இந்தத் தேர்தல்களின்போது நடைபெற்ற ஒரு சில நிகழ்வுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. இந்த நிகழ்ச்சிகள் இம்மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தும் அடிப்படை நோக்கத்தையே தகர்ப்பதாக அரசு கருதுகிறது. அரசானது, கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை அவை எங்கெங்கெல்லாம் நடைபெற்றனவோ, அங்கெங்கெல்லாம் நீக்கம் செய்வதெனவும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் புதிய தேர்தல்களை நடத்துவது எனவும் முடிவு செய்து அதற்கிணங்கிய வகையில் ஆணையிட்டுள்ளது. சட்டமன்றத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களையும் கலந்தாய்வு செய்த பின்னர், புதிய தேர்தல்களுக்கான புதிய தேர்தல் கால அட்டவணை ஒன்று உரிய முறையில் அரசினால் அறிவிக்கப்படும்.

3. மேற்சொன்ன பொருட்பாட்டின் காரணமாக, தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 24—ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ நடத்த இயலவில்லை. அனைத்துத் தொடக்க நிலைக் கூட்டுறவுச் சங்கங்களிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட குழுமங்கள் அமைத்துருவாக்கப்பட்ட பின்னர் மட்டுமே மைய மற்றும் உச்சநிலைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்களை நடத்தவியலும். எனவே அரசானது, அந்நோக்கத்திற்காக மேற்சொன்ன சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதன்மூலம் தொடக்கநிலைக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 24—ஆம் நாளுக்கு அப்பாலும், மைய மற்றும் உச்சநிலை கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்த அளவில் 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 25—ஆம் தேதிக்கு அப்பாலும் மேலும் ஆறு மாதங்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு மேற்சொன்ன கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிப்பதென முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில் 2009—ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் (திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 1/2009) 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 20—ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டு, அது 2009—ஆம் ஆண்டு மே திங்கள் 22—ஆம் தேதியிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

4. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைய விழைகிறது.

**கோ. சி. மணி,**
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 17/2009**

***1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தை அது தமிழ்நாடு மாநிலத்திற்குப் பொருந்துவதைப் பொறுத்த அளவில் மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2009ஆம் ஆண்டு பதிவுச் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம் என வழங்கப் பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

மையச் சட்டம் XVI/1908.

89-ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் 89—ஆம் பிரிவில், (2A) எனும் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(2B) 1997ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 44/1997) அசையாச் சொத்தினை இடைக்காலப் பற்றுகை செய்வதற்கான அல்லது நீக்குவதற்கான ஆணை ஒன்றைப் பிறப்பிக்கிற மாநில அரசானது, அத்தகைய ஆணையின் நகல் ஒன்றினை அச்சொத்தின் முழு விவரங்களைக் கொடுக்கிற வகையில் குறிப்பாணை ஒன்றுடன் சேர்த்து, மேற்சொன்ன அசையாச் சொத்தானது முழுமையாகவோ அல்லது அதன் பகுதி எதுவுமோ எந்த பதிவு அலுவலரின் அதிகார வரம்பிற்குள் அமைந்த உள்ளாட்சி வரம்பிற்குள் வருகிறதோ அந்தப் பதிவு அலுவலருக்கு அனுப்புதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பதிவு செய்யும் அலுவலர், அத்தகைய ஆணையின் நகலை புத்தக எண்1—ல் சேர்த்து வைத்தல் வேண்டும்; அல்லது மின்னணுப்படி எடுக்க ஆவன செய்தல் வேண்டும்.

**நோக்க–காரண விளக்கவுரை**

1997ஆம் ஆண்டு தமிழ்நாடு (நிதி நிறுவனங்களில்) வைப்பீட்டாளர்களின் நலன்கள் பாதுகாப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 44/1997) 3–ஆம் பிரிவின்படி, மாநில அரசினால் பிறப்பிக்கப்படும் இடைக்காலப் பற்றுகை ஆணையை அல்லது மேற்சொன்ன இடைக்காலப் பற்றுகை ஆணையை நீக்குகிற ஆணையை புத்தகத்தில் சேர்த்து வைப்பதற்கு, 1908ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தில் (மையச் சட்டம் XVI/1908) திட்டவட்டமான வகைமுறை எதுவும் இல்லாத காரணத்தால் பதிவு செய்யும் அலுவலரால் பேணிவரப்படும் புத்தக எண் 1–ல் சேர்த்து வைக்கப்படுவதில்லை. எனவே, மாநில அரசினால் பிறப்பிக்கப்படும் இடைக்காலப் பற்றுகை ஆணையை அல்லது இடைக்காலப் பற்றுகை ஆணையை நீக்குகிற ஆணையை, பதிவு செய்யும் அலுவலரால் பேணி வரப்படும் புத்தக எண் 1–ல் சேர்த்து வைப்பதற்காக அனுப்பி வைப்பதற்கு மாநில அரசை இயல்விக்கும் வகையில், மேற்சொன்ன சட்டத்தை திருத்துவதெனக் கருதப்பட்டுள்ளது. எனவே, அரசானது மேற்சொன்ன நோக்கத்திற்காக, மேற்சொன்ன சட்டத்தைத் திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். சுரேஷ்ராஜன்,**
*சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

**2009—ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 14—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க—காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின்கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/2009**

*2006—ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்ட முன் வடிவு.*

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம் 2009ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தம்) திருத்தச் சட்டம் என வழங்கப் பெறும். **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.**

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**தமிழ்நாடு சட்டம் 13/2008.** 2. 2006ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவு (தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தின் 1—ஆம் பிரிவில், (3)ஆம் உட்பிரிவில், ''அறிவிக்கையின் வாயிலாக குறிக்கலாம்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்னர் ''மற்றும் இந்தச் சட்டத்தின் வெவ்வேறு வகைமுறைகளுக்கு வெவ்வேறு தேதிகள் குறிக்கப்படலாம்'' என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும். **1ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

**நோக்க—காரண விளக்கவுரை**

2006ஆம் ஆண்டு இந்திய முத்திரை மற்றும் பதிவுச்(தமிழ்நாடு திருத்தச்) சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் 13/2008) திருத்தப்பட்டவாறான 1899ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டத்தின் (மையச் சட்டம் II/1899) 47—A எனும் பிரிவானது, உரிமை மாற்றம், கூட்டாண்மையைக் கலைத்தல் சொத்துப் பரிமாற்றம், பரிசு, பாகப்பிரிவினை, விடுதலை அல்லது அறுதி செய்வதற்கான முறையாவணம் எதனையும் பதிவு செய்கையில் அத்தகைய ஆவணத்தின் பொருட்பாடான சொத்தின் சந்தை மதிப்பினை, 47—AA எனும் பிரிவின்படி அமைக்கப்பட்ட "மதிப்பீட்டுக் குழுவினால்" தயாரிக்கப்பட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பு வழிகாட்டு நெறிமுறைகளின்படி மதிப்பீடு செய்வதற்குப் பதிவு செய்யும் அலுவலருக்கு அதிகாரமளிக்கிறது. 13/2008 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்தினால் புகுத்தப்பட்டவாறான 47—A எனும் மேற்சொன்ன பிரிவானது மாநிலத்திலுள்ள சொத்துக்களைப் பொறுத்தளவில் சந்தை மதிப்பு வழிகாட்டு நெறிமுறைகளை மதிப்பிடுவதற்காகவும், வெளியிடுவதற்காகவும் மற்றும் சீராய்வு செய்வதற்காகவும் பதிவுத் துறைத் தலைவரின் தலைமையின்கீழ் மதிப்பீட்டுக் குழு ஒன்றினை அமைப்பதற்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும் மதிப்பீட்டுக் குழுவினால் துணைக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கும் அதிகாரமளிக்கிறது. மேற்சொன்ன மதிப்பீட்டுக் குழுவினால் தயாரிக்கப்பட்ட சொத்துக்களின் சந்தை மதிப்பு வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டதற்குப் பின்னர் மட்டுமே II/1899 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன மையச்சட்டத்தின் 47—A எனும் பிரிவின்படி பதிவு அலுவலர் சொத்தின் சந்தை மதிப்பினை மதிப்பிடுவதற்கு இயலும். எனவே, 13/2008 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ் நாடு சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 47—A எனும் மேற்சொன்ன பிரிவின் வகைமுறைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கிற தேதிக்கு முன்னதாகவே, 47—AA எனும் மேற்சொன்ன பிரிவின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பது தேவையானதெனக் கருதப்படுகிறது. அதற்கிணங்கிய வகையில், அரசானது அந்நோக்கத்திற்காக 13/2008 எனும் எண்ணிட்ட மேற்சொன்ன தமிழ்நாடு சட்டத்தைத் தக்கவாறு திருத்துவதென முடிவு செய்துள்ளது.

2. இச்சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**என். சுரேஷ்ராஜன்,**
*சுற்றுலா மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.*

மா. செல்வராஜ்,
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.